12 JAN 2024
சென்னை-35

11 JAN 2024

சுருக்கம்

பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - கருணை அடிப்படை பணி நியமனம் திருமதி.ஆர்.பேபி, த/பெ (லேட்) ப.ரங்கநாதன், இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணைகள் - வெளியிடப்படுகிறது.

---

**கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப-7) துறை**

**திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது மார்கழி மாதம் 23-ம் நாள்**

அரசாணை (டி) எண்.10 நாள்: 08.01.2024

001940

படிக்கப்பட்டவை:

கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரது கடித ந.க.எண்.72537/ஆர்3 /2008, நாள் 29.11.2019 மற்றும் 01.08.2023.

*****

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடிதங்களில் அரியலூர் மண்டலம், பெரியவளையம் கால்நடை மருத்துவமனையில் கால்நடை பராமரிப்பு உதவியாளராக பணியிலிருக்கும்போது 29.09.2005 அன்று மறைந்த திரு.ப.ரங்கநாதன் என்பவரது வாரிசுதாரரான திருமதி.ஆர்.பேபி என்பவருக்கு கருணை அடிப்படையில் தஞ்சாவூர், கால்நடை பராமரிப்புத் துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் 23.11.2016 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின் அனைத்து ஆவணங்கள் /சான்றுகள் சரிபார்க்கப்பட்டது என்றும் எனவே தனியரது பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 23.11.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று கருணை அடிப்படையில் தஞ்சாவூர் கால்நடை பராமரிப்புத் துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.ஆர்.பேபி என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 23.11.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

3. தனியரின் பணிவரன்முறை தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறும் தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகின்றன. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வரசாணைக்கு மனிதவள மேலாண்மைத் துறையின் கடித எண்.3248/ஏ2/2023-1, நாள் 07.09.2023ன்படி மனிதவள மேலாண்மை துறையின் ஒத்திசைவு பெறத் தேவையில்லை..

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள்,
சென்னை-35.
திருமதி. ஆர். பேபி, இளநிலை உதவியாளர்.
(இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள்,
சென்னை-35-ன் மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை-18/18 (பெயரில்).
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

நகல்:
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு,
பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

(ஜெ. பிரமிளா)
அரசு சார்புச் செயலாளர்
8.4.24